
பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 17 புதன்கிழமை 01.01.2025 | அதிர்வு 153

## பேராயரை அவதூறு செய்த நாமல் குமார இன்று கைது!



சமூகச் செயற்பாட்டாளர் நாமல் குமார கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார். 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# முதலில் தீர்வு கண்டால் அனைத்தும் சரி வரும்!

### அநுர அரசுக்கு செல்வம் எம்.பி. அறிவுரை

(மன்னார் நிருபர்)

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் அநுர அரசு பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது என்று ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று புதன் கிழமை காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 03

# பிரபாகரன் தப்பிச் செல்வதற்காகவே போர் நிறுத்தம் செய்தாராம் மஹிந்த

### இப்படிக் கூறுகின்றார் பொன்சேகா







இறுதிப் போரின்போது பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பித்துச் செல்வதற்காகவே 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தத்தை வழங்கினார் என்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ள இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத் தளபதியாகச் செயற்பட்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, மஹிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்றும் கூறினார். 03

# மறைந்த மன்மோகனுக்கு சஜித் இரங்கல் தெரிவிப்பு




இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கு தனது இரங்கலைத் தெரிவித்தார்.

## மன்மோகனுக்குச் சாணக்கியன், சுமந்திரன் இரங்கல்




இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் வைக்கப்பட்டுள்ள இரங்கல் பதிவேட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கைச்சாத்திட்டார்கள்.

# நாட்டை மீட்ட மஹிந்தவை நிச்சயம் பாதுகாப்போம்!

## மொட்டுக் கட்சி தெரிவிப்பு



"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அரசியலில் இருந்து ஓய்வுபெற வைப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது. ஏனெனில் மஹிந்தவுக்கு ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"இந்த நாட்டில் அதிக பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தலைவர்தான் மஹிந்த ராஜபக்ஷ. அவருக்குத் தேவையான பாதுகாப்பை வழங்காமல், அவரை வீட்டுக்குள்ளேயே முடக்கி, அரசியலில் இருந்து ஓய்வுபெற வைப்பதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. மஹிந்தவைக் கண்டு தற்போதைய அரசு அஞ்சுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு போதாது என அவரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர். இந்நிலையிலும் பாதுகாப்பு



குறைக்கப்பட்டுள்ளது. நாட்டை மீட்ட தலைவரை நாம் நிச்சயம் பாதுகாப்போம்.

புலிகளை ஒழித்த தலைவருக்கும், புலிகளுடன் பேச்சு நடத்தியவர்களுக்கும் ஒரே அளவான பாதுகாப்பை வழங்குவது நியாயமா?" – என்றார்.

# மக்களுக்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவைக்கு ஒப்பானது!



## புத்தாண்டுக் கடமை ஆரம்ப நிகழ்வில் வடக்கு ஆளுநர் உரை

"எங்கள் மக்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய சேவைகள் ஏராளம் இருக்கின்றன. அவற்றைப் பொறுப்புணர்ந்து நாம் ஒவ்வொரும் செய்வதற்கு இந்தப் புதிய ஆண்டில் உறுதி பூணுவோம்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. முதல் நாள் கடமைகளை ஆரம்பிக்கும் அரச சேவை உறுதிமொழியெடுக்கும் நிகழ்வை வடக்கு மாகாண ஆளுநர் தேசியக் கொடி ஏற்றி வைத்து ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் கொடியை வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் "தூய்மையான இலங்கை" திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.

மேலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற "தூய்மையான இலங்கை" தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஆளுநர் செயலக பணியாளர்கள் நேரலை ஊடக இணைந்திருந்தனர்.

அந்த நிகழ்வு முடிவடைந்த பின்னர் ஆளுநர் செயலகப் பணியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

"மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் நீங்கள் ஒவ்வொருவரும் செயலாற்ற வேண்டும். மக்களின் கோரிக்கைகளை அலைக்கழித்து, தட்டிக்கழிக்க வேண்டாம். அரச அலுவலகங்களுக்குச் சென்றால் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் கட்டியெழுப்புங்கள்.

கடந்த காலங்களில் அரசியல் அழுத்தங்களால் – தலையீடுகளால் உங்களின் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சில குழப்பங்கள் – தடங்கல்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், தற்போதைய அரசின் காலத்தில் அவ்வாறான நிலைமைகள் நிச்சயம் உங்களுக்கு ஏற்படாது.

தற்போதைய அரசு ஊழல், இலஞ்சம் அற்ற அரச சேவையையே எதிர்பார்க்கின்றது. அதை நாங்கள் வழங்க வேண்டும்.

அரசின் இலக்கு வெற்றியடைய நாங்கள் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான் நாங்கள் ஒவ்வொருவரும் இருக்கின்றோம். மக்களுக்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவைக்கு ஒப்பானது." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### பிரபாகரன்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் பொன்சேகா மேலும் கூறியதாவது:–

"போர் இடம்பெறும் காலப்பகுதியில்கூட மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கவில்லை. அவரைக் கொலை செய்வதற்கு பயங்கரவாதிகள் முற்படவில்லை. மஹிந்த தனித்துச் சென்றா போர் செய்தார்? இராணுவத் தளபதி என்ற அடிப்படையில் நாம் கட்டளை பிறப்பிக்கவில்லையா?

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு எனக்கான பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டது. என்னைச் சிறையில் அடைத்தனர். அங்கு புலிகளும் இருந்தனர். அப்போது எமக்கு அச்சுறுத்தல் இருக்கவில்லையா?

மஹிந்த ராஜபக்ஷ மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தமாட்டார்கள். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது பிரபாகரனுடன் பேச்சு நடத்துவது பற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மஹிந்த குறிப்பிட்டிருந்தார். போரை அனுமதிக்கவில்லை எனவும் அவர் கூறியிருந்தார். எனவே, மஹிந்தவுடன் புலிகளுக்கு எவ்வித வைராக்கியமும் இல்லை.

நாம் வேண்டாம் எனக் கூறியும், போர் முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அதாவது 2009 ஜனவரி 31, பெப்ரவரி 1 மஹிந்த போர் நிறுத்தத்தை வழங்கினார். இந்த போர் நிறுத்தத்தை வழங்காவிடின் மூன்று மாதங்களுக்கு முன்னரே போர் முடிந்திருக்கும்.

இந்தப் போர் நிறுத்த காலப் பகுதியில் தீவிரவாதிகளின் தாக்குதலால் 5 கிலோ மீற்றர் வரை பின்நோக்கி வரவேண்டிய நிலை எமது இராணுவத்துக்கு ஏற்பட்டது. பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பிச் செல்வதற்காகவே அந்தப் போர் நிறுத்தம் வழங்கப்பட்டிருந்தது. எனவே, மஹிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்த மாட்டார்கள்.

மிக் விமானத்தைவிடவும் ட்ரோன் விமானங்கள் விலை அதிகம். அவ்வளவு அதிக பணத்தைச் செலவளித்து மஹிந்த மீது யார் தாக்குதல் நடத்துவது?" – என்றார் பொன்சேகா.

### பேராயரை...

வாக்குமூலம் வழங்க வந்த வேளை அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பேராயர் கர்தினால் கர்தினால் ரஞ்சித்தை அவதூறு செய்யும் வகையில் சமூக ஊடகங்களில் ஒலிப்பதிவு பரப்பப்பட்டமை தொடர்பில் நாமல் குமார கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கொழும்பு பேராயர் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### முதலில் தீர்வு...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புலம்பெயர்ந்துள்ள எம் உறவுகள், எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதி அநுர கருத்தில்கொள்ள வேண்டும்.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம், இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

எனவே, இந்த புதிய ஆண்டில் எமது கிராம மக்கள் அனைத்து விதமான வசதிகளும் உள்ளன என்று கூறக்கூடிய வகையில் இந்த அரசு செயற்பட வேண்டும்.

அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறோம். இந்த வருடத்தில் பின்தங்கிய கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி பெற வேண்டும். அதற்கான செயற்பாடுகளை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும்.

பிரிந்து செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நாங்கள் ஒற்றுமையாகச் செயற்படவில்லை என்றால் நம் மண்ணையும் மக்களையும் உதாசீனம் செய்யும் கட்சிகளாகவே நாம் இருப்போம்.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் தேசிய கட்சிகள் இல்லாது போகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படும்.

எதிர்வருகின்ற தேர்தல்களில் நாங்கள் ஒற்றுமையாகச் செயற்படவில்லை என்றால் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள அநுரவின் அலை வடக்கு, கிழக்கிலும் ஏற்படும். இதனால் பாதிப்புகள் எமக்கு ஏற்படும் என்பது உண்மை.

மக்களின் எதிர்பார்ப்பு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயற்படுங்கள் என்பதே. அந்த ஒற்றுமை இல்லை என்றால் நாங்கள் காணாமல் போய் விடுவோம்." – என்றார்.





# இலங்கை வடக்குக் கிழக்கு மாகாணங்களை பொருளாதார ரீதியில் கட்டி எழுப்பும் நோக்கம்

## சுவிஸ் தமிழ் வர்த்தகர்கள், சமூக ஆர்வலர்கள் ஆர்வம்

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களை பொருளாதார ரீதியில் கட்டி எழுப்பும் நோக்கில் சுவிஸ் நாட்டில் வசிக்கும் தமிழ் வர்த்தகர்கள், சமூக ஆர்வலர்கள் எதிர்காலத்துக்காக ஒன்றிணைவோம் எனும் நோக்கில்சமூகக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

சமூக செயற்பாட்டாளர் சி.பிரபாகரனின் ஒருங்கமைப்பில் சூரிச் மாநிலத்தில் கில்டன் கார்டன் இன்னில் ( hilton Garden Inn) மூத்த ஊடகவியலாளர் ஞா.குகநாதன் தலைமையில் நடைபெற்ற அங்குராப்பண நிகழ்வில் சுவிஸ் தமிழ் வர்த்தகர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் , வடக்குக் கிழக்குப் பகுதிகளில் முதலீடுகளை மேற்கொள்ளல், சுவிஸ் அரசின் அங்கிகாரம் பெறல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

இலங்கையிலிருந்து சமூக ஆர்வலர் எஸ். செல்வின், 'சூம்' ஊடாக இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலமைகளையும், அரசியல் நிலவரங்களையும் ,எவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்பது தொடரபிலும் எடுத்துரைத்தார்.

நிகழ்வில் பல்வேறு கலந்துரையாடல்களின் பின் அமைப்பு ஒன்றை உருவாக்குவது எனவும் கட்டமைப்புக்கான பெயரை காலப் போக்கில் தீர்மானிப்பது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணிகளின் ஆலோசனைகளுடன் யாப்பை உருவாக்குவதுடன் கட்டமைப்புக்குள் இளையோர்களையும் உள்வாங்கி அவர்களுக்குப் பொருத்தமான பொறுப்புக்களை வழங்குவது எனவும் தீர்மானிக்கபட்டது.


அமைப்பின் தலைவராக இளையதம்பி சிறிதாஸ், செயலாளராக இராசமாணிக்கம் ரவிந்திரன், உட்பட நிர்வாகக் குழு உறுப்பினர்களும், போசகராக ஊடகவியலாளர் ஞானசுந்தரம் குகநாதனும், ஒருங்கிணைப்பாளராக சி.பிரபாகரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.











Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலே சூத்திரதாரி

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் அதிகாரப் பகிர்வு ஏற்பாடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை, அதற்குரிய தேர்தல் நடத்தப்படாத சூழ்நிலையில் கடந்த ஏழு, எட்டு வருடங்களாக மக்கள் பிரதிநிதித்துவப் பங்களிப்பை இழந்து, அது கொண்டுவரப்பட்ட நோக்கத்தையும் பலி கொடுத்து நிற்கின்றது.

2017 வரை மாகாண சபை மூலமான அதிகாரப் பகிர்வு முறைமை குற்றுயிரும் குலையுயிருமாக இழுபட்டு, இழுபட்டு நீடித்தாலும், கடந்த ஏழு, எட்டு வருடங்களாக அது முழுமையாக செயலிழந்து படுத்துவிட்டது.

அச்சமயத்தில் அதிகாரத்திலிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தினால் அவற்றின் விளைவு தமக்கு பெரும் அரசியல் பின்னடைவைத் தரும் என்ற அச்சம் காரணமாக மாகாண சபை தேர்தல் முறைமைகளுக்கு ஆப்படிக்கும் ஒரு நகர்வைக் கொண்டு வந்தது.

அதுவரையில் மாகாண சபைகள் தேர்தல் தொடர்பான விடயங்களைக் முன்னெடுப்பதற்கு 1988 ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க மாகாண சபை தேர்தல் சட்டம் நடைமுறையில் இருந்தது. அதன் கீழ் மாகாண சபைகளுக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறைமை வகுக்கப்பட்டு சுமார் மூன்று தசாப்தங்களாக அது தொடர்ந்து வந்தது.

அந்த முறைமையை மாற்றி, தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கலந்த ஒரு கலப்புத் தேர்தல் பொறிமுறையை அடுத்த ஓராண்டுக்குள் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்து, அதன் அடிப்படையில் அதுவரையில் இருந்த மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தை முழுமையாக இடைநிறுத்தும் 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபை தேர்தல்கள் திருத்தச் சட்டத்தை ரணில் விக்கிரமசிங்கவின் அப்போதைய அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது.

ஆனால், உறுதியளித்தபடி அடுத்த ஓராண்டுக்குள் கலப்புப் பொறிமுறை கொண்ட மாகாண சபைத் தேர்தல் சட்ட மூலம் கொண்டு வந்து நிறைவேற்றப்படவில்லை. அதற்கான சில நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. தொகுதிவாரி தேர்தலுக்கான எல்லை நிர்ணய ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அதற்கான ஆணை குழு மூலம் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அது விடயத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையே இணக்கம் வரவில்லை என்ற காரணத்தைக் காட்டிப் புதிய தேர்தல்சட்டம்உருவாக்கப்படாமல் போய்விட்டது.

இந்தப் பின்புலத்தில் - ஏழு, எட்டு ஆண்டுகள் அந்தத் தேர்தல்கள் இல்லாமல் இழுபடுகின்ற சூழ்நிலையில் - பழைய தேர்தல் சட்டங்களை, அதாவது செயலிழந்த 1988 ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தை, அப்படியே மீள நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான ஒரு நகர்வை 2019 ஆம் ஆண்டிலும், அதன் பின்னர் வந்த அடுத்த நாடாளுமன்றத்திலும், இலங்கைத்தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனிநபர் பிரேரணையாகக் கொண்டு வந்தார்.

கடந்த நாடாளுமன்றத்தில் அதன் இறுதி அமர்வில் அந்தத் தேர்தல் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கான நகர்வு முன்னேற்றம் கண்ட போதிலும், கடைசி நிமிடத்தில் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலையீட்டினால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இப்போது மீண்டும் புதிதாக அந்தத் தேர்தல் சட்டத்தை மீளக் கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றியும் அதன் கீழ் அந்தத் தேர்தலை நடத்துவது குறித்தும் புதிய அரசு அறிவிப்புகளை விடுத்து வருகிறது.

நடைமுறையிலிருந்த மாகாண சபைகள் தேர்தல் சட்டம் இரத்தானமைக்கும், அச்சட்டத்தை மீளக் கொண்டு வர எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளிக்கும் சமயத்தில் அதற்கு ஆப்படித்தமைக்கும் தேர்தல்களைக் கண்டு அஞ்சும் ரணில் விக்கிரமசிங்க என்ற தனி மனிதரே - அரசியல் தலைவரே - பிரதான காரணம் என்பதை கடந்த ஏழு, எட்டு ஆண்டுகள் அந்த அதிகாரப் பகிர்வு செயன் முறையை இழந்திருக்கும் நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.



# புத்தாண்டை முன்னிட்டு நல்லூரில் வழிபாடுகள்!

பிறந்திருக்கும் ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி ஆலயததில் விஷேட தீப திருவிளக்கேற்றல் நிகழ்வு நள்ளிரவு தேரடிக்கு அருகாமையில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

நல்லூர் கந்தசாமி தேவஸ்தானத்தின் பிரதான மணியோசை ஒலிக்கப்பட்டது. தேவஸ்தான பிரதம குருவான சிவஸ்ரீ வைகுந்த குருக்கள் தலைமையில் விஷேட தீபத் திருவிளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பக்தர்கள் பலரும் கலந்து கொண்டு கற்பூரம் எற்றியும், திருவிளக்கேற்றியும் வழிபட்டனர்.





# தொல்லியல் திணைக்களத்தினருக்கு எதிராக குச்சவெளி பிரதேச விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட விவசாயிகளால் தொல்லியல் துறையினருக்கு எதிரான மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (01) குச்சவெளி பழைய பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்டது.

1962 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 வரையான காலப் பகுதிகள் வரைக்கும் திருகோணமலை மாவட்டத்தில் மிகப்பெரிய நெற்களஞ்சிய சாலையாக விளங்கிய இடத்தில் 1985 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப் பகுதியில் குச்சவெளி பொலிஸ் நிலையம் தற்காலிகமாக இயங்கி வந்தது.

கடந்த ஆண்டு குச்சவெளி பொலிஸ் நிலையம் அவ்விடத்தில் இருந்து இடம் மாற்றம் செய்யப்பட்டது. அடுத்து குறித்த இடம் மீண்டும் நெற்களஞ்சிய சாலையாக இயக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இந்த நிலையில் இலங்கை தொல்லியல் திணைக்களத்தினரால் அவ்விடம் தொல்லியல் திணைக்களத்துக்கு உரிய இடம் என்று பதாதை வைக்கப்பட்டு தொல்லியல் துறை வசமானது.



இந்த இடமானது மூவின மக்களும் ஒற்றுமையாக வாழக் கூடிய இடமாக விளங்குவதோடு இந்து சமய கோயில், முஸ்லிம் பள்ளிவாசல், சிங்கள விகாரை போன்றன குறித்த இடத்தில் மிக அருகில் உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகததுக்கு உட்பட்ட அனேகமான காணிகள் தொல்லியல் துறையினரால் அடாவடியான முறையில் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கையை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரி குச்சவெளி பிரதேச விவசாயிகள் ஒன்று கூடி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்வைப் பெற்று அந்தக் காணியை மீண்டும் நெற்களஞ்சிய சாலையாக பயன்படுத்துவதற்கு அனுமதி தருமாறு கோரி குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.




குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998




# வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தில் புதுவருட கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு!



2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று (01) வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வருடத்துக்கான முதல் நாள் கடமைகளை ஆரம்பிக்கும் அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது புதிய ஆண்டை வரவேற்று தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 8.30 மணிக்கு பிரதேச செயலாளரால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டடு, உத்தியோகத்தர்கள் அனைவரும் 'தூய்மையான இலங்கை' திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.

நிகழ்வில் பிரதேசசெயலாளர் சி.சத்தியசீலன் 2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தன், கணக்காளர் ம.சிவகுமாரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி, நிர்வாக கிராம அலுவலர் சோ.சிவலிங்கம், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் அ.ரவிச்சந்திரன் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், மற்றும் செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.









# புதிய வருடத் தொடக்கத்திலேயே இறைவன் ஆசீரால் நிரப்புகின்றார்

## அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

புத்தாண்டு தொடக்கத்திலேயே இறைவன் எம்மை மூன்று ஆசீர்வாதங்கள் வழங்கி எம்மை அமைதியின் வழிக்கு இட்டுச் செல்லுகின்றார் என்று பேசாலை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தெரிவித்தார்.

புதிய வருட இரவுத் திருப்பலி பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் பங்கு தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதன் போது அவர் இங்கு தனது மறையுரை இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 2025 ஆம் புதிய ஆண்டில் நாம் காலடி வைக்கின்றோம். இறை இயேசுவின் 2025 ஆம் ஆண்டின் யூபிலி ஆண்டிலும் நாம் தடம் பதிக்கின்றோம்.

ஒரு தாயின் ஒரே மகள் சிறு குழந்தைக்கு இருதய சத்திர சிகிச்சை. தாயானவள் தனது குழந்தைக்குத் தைரியம் ஊட்டுவதற்காக மகள் பயப்படாதே. உனது இதயத்தில் இயேசு அப்பா இருக்கின்றார் என்கிறாள்.

சத்திர சிகிச்சை முடிவுற்றது. குழந்தையும் சுய அறிவுக்கு திரும்பியதை தொடர்ந்து குழந்தை வைத்தியரை நோக்கி டாக்டர் என் இதயத்தில் இயேசு அப்பா இருக்கின்றார் என அம்மா சொன்னாங்க சிகிச்சையின்போது என் இதயத்தில் இருந்த இயேசு அப்பாவுக்கு ஒன்றும் நடக்கவில்லைதானே? அவர் எப்படி இருந்தார் எனக் கேட்கின்றாள்.

அதற்கு அந்த வைத்தியர் குழந்தையின் தாயை அழைத்து குழந்தையின் கையில் பிடித்து உனது தாயைப் போலவே காணப்பட்டார் என பதிலளிக்கின்றார்.

ஆம் தாயானவள் எமக்கு தெய்வம். இதனால்தான் மரியன்னைக்கு நாம் பல பெயர்கள் சூட்டி அழைக்கின்றோம்.

இதனால்தான் திருச்சபையும் வருடத்தின் முதல் நாளை மரியன்னையின் நாளாக நினைவு கூர்ந்து கடன் திருநாளாக அனுஷ்டிக்கின்றது.

கி.பி. 431 ஆம் ஆண்டு ஆயர்கள் இறை வல்லுனர்கள் பொதுச் சங்கம் ஒன்றைக் கூட்டி மிக நுணுக்கமாக ஆராய்ந்து அன்னை மரியாள் இயேசுவின் தாய் என தீர்மானித்து இந்த நாளை நினைவு கூர்ந்து வருகின்றோம்.

வருடத்தின் தொடக்க நாளிள் இறைவன் எமக்கு மூன்று ஆசீர்வாதங்கள் வழங்குகின்றார். முதலாவது கடவுள் உனக்கு ஆசீர் வழங்கி உன்னை காப்பாராக.

இரண்டாவதாக ஆண்டவர் தனது திருமுகத்தை உன்மீது ஒளிரச் செய்து உன்மீது அருள் பொழிவாராக. மூன்றாவது ஆண்டவர் தனது திருமுகத்தை உன் பக்கம் திருப்பி அருள் பொழிவாராக என வேதாகமம் தெரிவித்துள்ளது.

இந்த புத்தாண்டில் இறைவன் தனது அருள் செல்வங்களால் எம்மை ஆசீர்வதித்து அமைதியின் வழியில் அழைத்து செல்வார் என்ற நம்பிக்கையுடன் இந்த புத்தாண்டில் பயணிப்போம்.– என்றார்.





# புதிய வருடத்துக்கான கடமைகளை பொறுப்பேற்ற மன்னார் செயலகம்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை வைபவ ரீதியாக ஆரம்பிக்கும் நிகழ்வானது இன்று (01) மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை மாவட்ட அரச அதிபர் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. உத்தியோகத்தர்கள் அனைவரும் 'தூய்மையான இலங்கை' திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.



# குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ**

குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் தேசியப் பணிக்கு ஆயத்தமாக வேண்டும்.

வெளிப்படைத் தன்மையுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக் கூறக்கூடிய உன்னத சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் தலைவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் ஒன்றிணைந்து இதனை ஒரு பொறுப்பாகவும் கடமையாகவும் கருத வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2025 ஆம் புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக இன்று (01) காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தியோக பூர்வ நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

சாதாரண மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் உன்னத, நேரிய பயனுள்ள பொதுச் சேவையை வழங்குதல் போலவே நெறிமுறைகளைப் பேணுவதுடன், பொதுச் சொத்துக்கள் மற்றும் வளங்களை துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கக் கூடாது.

நாட்டுக்கு செயல் திறமையோடு வினைத்திறனான சேவையை ஆற்ற வேண்டும். தனிநபர் இலாபத்தை விட நாட்டு மக்களின் நலனுக்காக கூட்டாக செயற்பட ஒன்றிணையுங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.





சர்வமத தலைவர்களின் ஆசிர்வாதங்களுடன் மிகவும் நேர்த்தியான முறையில் இங்கு புது வருட கடமைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.





# கல்முனை, அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர்கள் இன்று கடமையேற்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளராக ஏ.ரி.எம். றாபியும் அக்கரைப்பற்று மாநகர சபையின் புதிய ஆணையாளராக என்.எம். நௌபீஸ்ஸும் இன்று புதன்கிழமை (01) தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இதன்போது இந்த மாநகர சபைகளின் உத்தியோகத்தர்களால் வரவேற்கப்பட்டனர்.

கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளரான ஏ.ரி.எம். றாபி இதற்கு முன்னர் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளராக கடமையாற்றி வந்துள்ளார்.

அவ்வாறே அக்கரைப்பற்று மாநகர சபையின் புதிய ஆணையாளரான என்.எம். நௌபீஸ் இதற்கு முன்னர் கல்முனை மாநகர ஆணையாளராகவும் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பிரிவு பணிப்பாளராகவும் கடமையாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் கடும் மழைக்கு மத்தியில் புத்தாண்டு நள்ளிரவுத் திருப்பலி!



**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மறை மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி கடும் மழைக்கு மத்தியில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 11.45 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

திருப்பலியின் போது ஆலயத்துக்குப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

திருப்பலியில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.







# மலையகத்தில் புதுவருடக் கொண்டாட்டம்!

(க.கிஷாந்தன்)

உலகெங்கிலும் இன்று ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் கொண்டாடங்கள் நடைபெற்றுள்ளன.

அந்தவகையில் மலையகத்திலும் புதுவருட கொண்டாட்டங்களும் வானவேடிக்கைகளும் இடம்பெற்றன.

இதன்போது நள்ளிரவு 12 மணியளவில் வானவேடிக்கைகள் வெடிக்கப்பட்டன. இவற்றைக் கண்டுகளிப்பதற்காக பெருமளவு மக்கள் நகருக்குள் ஒன்று கூடியிருந்தனர்.

புத்தாண்டை முன்னிட்டு கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் குருக்கள் ஸ்ரீ கந்தன் தலைமையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. நாட்டில் சாந்தியும் சமாதானம் ஏற்படவும், மக்கள் மகிழ்ச்சியுடன் வாழவும் சிறப்பு பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இன்றைய தினம் பெருமளவான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகைதந்து நெய் விளக்கு ஏற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

அத்தோடு கிறிஸ்தவ தேவாலயங்களில் புதுவருட ஆராதனைகளும், மசூதிகளில் விசேட தொழுகைகளும் விகாரைகளில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.





# ஆங்கில புத்தாண்டையொட்டி ஜனாதிபதி திரவுபதி, பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து





உலகம் முழுவதும் 2025 ஆங்கில புத்தாண்டு இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. ஆங்கில புத்தாண்டை மக்கள் உற்சாகமாக வரவேற்று கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில், தமிழகம் முழுவதும் கோவில்களிலும், தேவாலயங்களிலிலும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. புத்தாண்டையொட்டி அரசியல் தலைவர்கள், நடிகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் ஆங்கில புத்தாண்டையொட்டி ஜனாதிபதி திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி திரவுபதி முர்மு எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். 2025 ஆம் ஆண்டு அனைவருக்கும் மகிழ்ச்சி, நல்லிணக்கம் மற்றும் செழிப்பைக் கொண்டு வரட்டும். இந்த சந்தர்ப்பத்தில், இந்தியாவிற்கும் உலகிற்கும் ஒரு பிரகாசமான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான நமது உறுதிப்பாட்டை புதுப்பிப்போம்" என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

"2025 ஆம் ஆண்டு இனிதாக அமையட்டும். இந்த ஆண்டு அனைவருக்கும் புதிய வாய்ப்புகள், வெற்றி மற்றும் முடிவில்லா மகிழ்ச்சியைக் கொண்டு வரட்டும். அனைவருக்கும் அற்புதமான ஆரோக்கியம் மற்றும் செழிப்பு கிடைக்கட்டும்." என்று தெரிவித்துள்ளார்.







# ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கோயில்கள், தேவாலயங்களில் வழிபாடு



புத்தாண்டு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதிலும் மக்கள் கோயில்கள் மற்றும் தேவாலயங்களுக்குச் சென்று வழிபாடு மேற்கொண்டனர்.

2025 ஆம் ஆண்டின் முதல் நாளான இன்று இந்த ஆண்டு சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்தியா முழுவதிலும் மக்கள் கோயில்கள், தேவாலயங்களுக்குச் சென்று வழிபாடு மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை, திருச்சி, காஞ்சிபுரம், மதுரை, கோவை, திருநெல்வேலி, திருத்தணி, பழனி, திருச்செந்தூர் உள்பட மாநிலம் முழுவதும் உள்ள கோயில்களில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வழிபாடு மேற்கொண்டனர். சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம் உள்ளிட்ட தேவாலயங்களில் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனைகளில் ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. அதிகாலை முதலே ஏராளமான பக்தர்கள் ஏழுமலையானை தரிசித்து வருகின்றனர். இதேபோல், மத்திய பிரதேசத்தின் உஜ்ஜயினியில் உள்ள ஸ்ரீ மஹாகாலேஷ்வர் ஜோதிர்லிங்க கோயிலிலும் ஏராளமான பக்தர்கள் வழிபாடு மேற்கொண்டனர்.

டில்லியின் ஜந்தேவாலன் கிருஷ்ணர் கோயில், பிர்லா மந்திர், சத்தார்பூர் துர்க்கை கோயில், ஹனுமன் கோயில், கல்காஜி கோயில் உள்ளிட்ட கோயில்களில் நடைபெற்ற சிறப்பு ஆராதனைகளில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு மேற்கொண்டனர். ஹரியானாவின் பஞ்ச்குலாவில் உள்ள மான்சா தேவி கோயிலில் ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர்.

அயோத்தியில் புத்தாண்டு வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதிகாலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து சரயு நதியில் நீராடி சூரியனுக்கு தீபம் காட்டி, பின்னர் ராமர் கோயில் சென்று வழிபாடு மேற்கொண்டனர்.

உத்தராகண்ட்டின் ஹரித்வார் நகரில் அதிகாலை முதலே பக்தர்கள் கங்கையில் நீராடி வழிபாடு மேற்கொண்டனர். ராஜஸ்தானின் அஜ்மீரில் உள்ள குவாஜா கரீப் நவாஸ் தர்காவில் ஏராளமான இஸ்லாமியர்கள் அதிகாலையிலேயே கூடி பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அஸ்ஸாமில் உள்ள காமாக்கியா கோயிலில் அதிகாலை முதலே பக்தர்கள் குவிந்து தீபம், ஊதுபத்தி ஆகியவற்றைக் காட்டி வழிபாடு மேற்கொண்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரி விக்கின்றன.





# ஹமாஸ் அமைப்பின் மற்றுமொரு தளபதி பலி

ஹமாஸ் அமைப்பின் நுக்பா படைப்பிரிவு தளபதி அப்துல்-ஹாதி சபா தெற்கு காசாவில் உள்ள கான் யூனிஸ் பகுதியில் வைத்து கொல்லப்பட்டார் என இஸ்ரேல் பாதுகாப்பு படை உறுதிப்படுத்தியுள்ளது.

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆளில்லா விமான தாக்குதலில் அப்துல் ஹாதி கொல்லப்பட்டார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி கிபுட்ஸ் நிர் ஓஸ்-இல் நடத்தப்பட்ட கொடூர தாக்குதலை அப்துல் ஹாதி சபா வழிநடத்தியதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்த எக்ஸ் தள பதிவில், "இஸ்ரேல் பாதுகாப்பு படையின் உளவுத்துறை மற்றும் ஐ.எஸ்.ஏ. தாக்குதலில் நுக்பா படைப்பிரிவு தளபதியான அப்துல் ஹாதி சபா கொல்லப்பட்டார்," என்று இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

மேலும் கொல்லப்பட்ட அப்துல் ஹாதி சபா இஸ்ரேல் பாதுகாப்பு படைகளுக்கு எதிராக பல்வேறு பயங்கரவாத தாக்குதல்களை வழி நடத்தியுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்தப்பட்ட கொடூர தாக்குதலில் பின்புலமாக இருந்த அனைத்து பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடரும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு படை குறிப்பிட்டுள்ளது.



# விண்வெளியில் 16 முறையாக புத்தாண்டு கொண்டாடுகிறார் சுனிதா

விண்வெளி ஆய்வு நிலையத்தில் உள்ள சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட குழுவினர் புத்தாண்டை கொண்டும் போது அவர்கள் 16 முறை சூரியோதயம் மற்றும் சூரிய அஸ்தமனத்தைப் பார்ப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது விண்வெளியில் இருக்கும் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம் மற்றும் அவரது குழுவினர், புத்தாண்டில் மட்டும் 16 முறை சூரிய உதயங்களைப் பார்க்கும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

விண்வெளி மையம் புவியின் சுற்றுவட்டப் பாதையில் சுற்றி வரும் போது அவர்கள் சூரிய உதயத்தை காண முடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து விண்வெளி நிலையம் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், "2024 ஆம் ஆண்டு முடியும் போது எக்ஸ்ப்-72 குழுவினர் 16 முறையை சூரியோதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் காண்பார்கள்" என்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் விண்வெளி வீரர் பேரிவில்மோருடன் போயிங் ஸ்டார்லிங் விண்கலத்தில் விண்வெளிக்குச் சென்ற சுனிதா வில்லியம்ஸ் 9 நாள்களில் பூமிக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சில தொழில்நுட்பக் கோளாறுகளால் அங்கேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது

இதனால், கிறிஸ்துமஸ் பண்டிகையையும் அங்கேயே கொண்டாடினார். இதுபற்றிய காணொளி ஒன்றை அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா பகிர்ந்துள்ளது.

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பேரிவில்மோர் மார்ச் மாதத்தில் பூமிக்கு திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்கள் பெப்ரவரியில் திரும்புவதற்குத் திட்டமிடப்பட்டனர். ஆனால், ஸ்பேஸ்எக்ஸின் க்ரூ-10 பணியின் தாமதம் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
பக்கங்கள் 03
புதன்கிழமை 01/01/2025

## கனடாவின் வின்ட்ஸோர் தீ விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் வின்ட்ஸோர் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில்ஒருவர்கொல்லப்பட்டுள்ளார்.

71 வயதான பெண் ஒருவரே இந்த தீ விபத்தில் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படு 02




# கனடாவில் இந்த ஆண்டில் பொருள்களின் விலை உயரும்

**கனடாவில் 2025 ஆம் ஆண்டு பொருள்களின் விலைகள் உயர்வடையும் என தெரிவிக்கப்படுகிறது.**

**அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

**நாடு தழுவிய ரீதியில் பலசரக்கு பொருள்களின் விலைகள் மூன்று தொடக்கம் ஐந்து வீதம் வரையில் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. கியூபெக் மாகாணத்தில் இந்த விலை அதிகரிப்பானது ஐந்து வீதமாக காணப்படும் என தெரிவிக்கப்படுகிறது.**

**கனடிய உணவு விலை அறிக்கை இந்த விடயத்தை சுட்டிக்காட்டி உள்ளது.**

நான்கு பேரை கொண்ட ஒரு குடும்பத்திற்கு அடுத்த ஆண்டு பல சரக்கு பொருள்களுக்கு மேலதிகமாக செலவிட நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அடுத்த ஆண்டில் சுமார் 800 டொலர்களை கூடுதலாக பலசரக்கு பொருள்களுக்காக செலவிட நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இறைச்சி வகைகள், மரக்கறி வகைகள், கோபி, பழப் பான வகைகள் என்பனவற்றின் விலைகள் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

விநியோக சங்கிலி பிரச்சனை, காலநிலை மாற்றம் மற்றும் கனடிய டொலரின் பெறுமதி வீழ்ச்சி போன்ற பல்வேறு ஏதுக்களினால் இவ்வாறு பொருள்களின் விலைகள் அதிகரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இறக்குமதியாளர்களின் கொள்வனவு இயலுமை குறைவடைய பொருள்களின் விலைகள் உயர்வடையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கனடாவில் இணைய வழியிலான துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பு

கனடாவில் இணைய வழியிலான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் இவ்வாறு அதிக அளவு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகி வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

கொவிட் 19 பெருந்தொற்றுக்கு பின்னர் நாட்டில் அதிக அளவான இணைய வழி சிறுவர் துஷ்பியோக சம்பவங்கள் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளைகள் அதிக நேரத்தை



இணையத்தில் செலவிடுவதனால் இவ்வாறான பிரச்சனைகள் ஏற்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இணைய வழியிலான சிறுவர் துஷ்பிரயோக குற்ற செயல்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

தற்காலத்தில் மிக சிறு வயதில் இருந்தே இணயம் பயன்படுத்தப்படுவதாகவும் இதனால் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவதற்கான சாத்தியங்களும் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோர் இந்த விவகாரம் தொடர்பில் கூடுதல் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

02





# கனடாவில் இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் சடலமாக மீட்பு

கனடாவில் இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்கரி பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு கொலைகளுடன் தொடர்புடைய ஆபத்தான நபர் என பொலிஸார் முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

38 வயதான பெனடிக் கமின்ஸி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கமின்ஸி தனது வாகனத்திற்கு அருகாமையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.







## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

வின்ட்ஸோர் சான்ட்விட்ஜ் வீதியில் அமைந்துள்ள குடியிருப்பில் இந்த தீ விபத்துச் சம்பவம் பதிவாகியுள்ளது.

தீ விபத்தில் சிக்கிய பெண் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த பெண் உயிரிழந்து விட்டார் என வின்ட்ஸோர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# கனடாவின் ஹாலிபெக்ஸில் இடம் பெற்ற விமான விபத்து தொடர்பில் விசாரணை

கனடாவின் ஹாலிபெக்ஸ் பகுதியில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து பாதுகாப்பு சபையினால் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எயார் கனடா விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்று ஹாலிபாக்ஸ் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்ட போது தீப்பற்றிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து சம்பவம் பயணிகள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த விபத்தினை தொடர்ந்து விமான நிலையத்தின் செயல்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. விமான பயணங்கள் குறிப்பிட்ட நேரம் வரையில் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு பின்னணியில் இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து கண்டறிவதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விமானத்தில் 73 பேர் பயணம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்மைய நாள்களாக உலகில் விமான விபத்து சம்பவங்கள் பதிவாகி வரும் நிலையில் இந்த ஹாலிபெக்ஸ் விபத்து குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




# கார் - ரயில் மோதி விபத்து

## இருவர் காயம்

கனடாவில் கார் மற்றும் ரயில் மோதிக் கொண்டதில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

கனடாவின் மொன்றியால் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் மோதுண்ட வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார் எனவும் பின்னர் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் காரில் பயணம் செய்த இருவர் காயமைடைந்துள்ளனர். எனினும் காயமடைந்த இருவருக்கும் உயிராபத்து கிடையாது என தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து இடம்பெற்ற பகுதிக்கு சென்று பார்வையிடுவதனை மக்கள் தவிர்க்க வேண்டுமெனவும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.